**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.164/2023**
**வழக்கு சாட்சி PW-11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரகாஷ் | தாலுகா | : | தென்காசி |
| தந்தை பெயர் | : | சுப்பிரமணியன் | தொழில் | : | ஒர்க் ஷாப் |
| கிராமம் | : | ஆவுடையானூர் | வயது | : | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 23rd, 2025.

**(2, 3, 4, 5, 10, 11 எதிரிகள் ஆஜரில்லை. இதர எதிரிகள் ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ஆவுடையானூரில் குடியிருந்து வருகிறேன். நான் ஒர்க் ஷாப் வைத்து வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். கடந்த 15 வருடங்களாக நான் அருணாச்சலம் என்பவருடைய காம்ளக்சில் ஒர்க் ஷாப் வைத்து நடத்தி வருகிறேன். 01.07.2022 ம் தேதி, இரவு சுமார் 10.00 மணியளவில் அ.சா.1 எனக்கு போன் செய்து தனது அப்பாவையும், அம்மாவையும் வீட்டில் அடித்து போட்டிருப்பதாக தகவல் சொன்னார். நான் சம்பவம் கேள்விபட்டு அ.சா.1 ன் வீட்டிற்கு போனேன். வீட்டில் ஆக்டஸ்ராணியின் அப்பா அருணச்சலம் மயங்கிய நிலையில் இருந்தார். அருணாச்சலத்தின் மனைவி கதறி அழுது கொண்டிருந்தார். மறுநாள் விசாரித்தபோது, அருணாச்சலம் சாரையும், அவரது மனைவியையும் அடித்து போட்டு விட்டு பணம், நகைகளை எடுத்துக்கொண்டு போய் விட்டதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பகுதி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் நான் நகை எதையும் கொடுத்ததாக சொன்னேனா? என்றால் நான் லோன் கட்டுவதற்காக அருணாச்சலம் என்பவரிடம் 48 கிராம் மாலைச் செயினை கொடுத்து இரண்டு இலட்ச ரூபாய் வாங்கியிருந்தேன், ஒரு வாரம் கழித்து என்னுடைய நகையும் அந்த சம்பவத்தில் காணாமால் போனதாக கேள்விபட்டேன். பின்னர், அந்த நகையை போலீசார் கண்டுபிடித்து கொடுத்ததாக கேள்விபட்டேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

எந்த தேதியில் அடகு வைத்தேன் என்று ஞாபகமில்லை. அடகு வைத்த நகை எந்த கடையிலிருந்து வாங்கினேன் என்றால் என்னுடைய திருமணத்தின் போது போட்டு வந்தார். அந்த செயினுக்கு குறிப்பிட்ட அடையாளங்கள் உண்டா? என்றால் இல்லை. செயின் வாங்கிய கடையின் அடையாளம் உள்ளதா? என்றால் எனக்கு தெரியாது. நான் காவல்நிலையம் சென்று அடையாளம் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை சம்பவம் நடந்த மறுநாள் என்னை விசாரித்தார்கள். பின்னர், என்னை விசாரிக்கவில்லை. விசாரித்தபோது, என்னுடைய பெயர், முகவரி எழுதி வாங்கிக்கொண்டார்கள் என்றாலும், வேறு எதுவும் வாங்கவில்லை என்றாலும் சரிதான். வெள்ளை பேப்பரில் போலீசார் எழுதிக்கொண்டார்களா? என்றால் நான் சரியாக கவனிக்கவில்லை. நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து நகையை பெற்று கொள்ளவில்லை. நான் சொன்ன மாதிரி நகையை அடகு வைக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.3ன் கடையில் நான் இருப்பதினால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.24 14:41:54 +0530

<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No.164/2023</u>
<u>வழக்கு சாட்சி PW-12</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சபாபதி | தாலுகா | : | தென்காசி |
| தந்தை பெயர் | : | சிதம்பரநாடார் | தொழில் | : | வியாபாரம் |
| கிராமம் | : | ஆவுடையானூர் | வயது | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 23rd, 2025.

**(2, 3, 4, 5, 10, 11 எதிரிகள் ஆஜரில்லை. இதர எதிரிகள் ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் ஆவுடையானூரில் குடியிருந்து வருகிறேன். நான் வியாபாரம் செய்து வருகிறேன். எதிரி சிவபிரகாஷை எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி சிவபிரகாஷின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அருணாச்சலத்தின் வீட்டு பக்கம் எனது வீடு உள்ளது. நான் அந்த கையெழுத்துக்களை எங்கு வைத்து போட்டு கொடுத்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. சிவபிரகாஷின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.21** ஆகும். அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.22** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 29.09.2022ம் தேதி காலை 09.00 மணியளவில் தென்காசி புது பஸ்ஸ்டாண்ட் பக்கம் போலீசார் என்னையும், சண்முகவேல் என்பவரையும் வரச்சொல்லி எங்கள் இருவர் முன்னிலையிலும் வழக்கின் எதிரி சிவபிரகாஷ் என்பவரை காவல் ஆய்வாளர் கைது செய்து என் முன்பாகவும், சாட்சி சண்முகவேல் முன்பும் விசாரித்தார்கள் என்றும், அப்போது எதிரிகள் தாங்களாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்பு பதிவு செய்தார்கள் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு சம்பவத்தில் எதிரி எடுத்து ஆஜர் செய்த தங்க டாலர் ஜெயின் ஒன்றையும், பணம் ரூ.50,000/–ஐயும் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியிலும் சாட்சிகளாக நாங்கள் கையெழுத்து போட்டோம் என்று கூறிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து அவர்களுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.24 14:41:14 +0530